செய்தித்தாள்:தினகரன்-பக்கம்-17-நாள்:19.07.2017

## தொழிலாளர் நலத்துறை சார்பில்

# நுகர்வோர் விழிப்புணர்வு கூட்டம்

திருத்துறைப்பூண்டி, ஜூலை 19: திருவாரூர் மாவட்ட தொழிலாளர் நலத்துறை சார்பில் சட்டமுறை எடையளவு சட்டம் மற்றும் பொட்டலப் பொருட்கள் விதிகளின் கீழ் நுகர்வோர் புகார் தெரிவித்தல் குறித்த விழிப்புணர்வு கூட்டம் திருத்துறைப்பூண்டி சாய் ராம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது.



தொழிலாளர் நலத்துறை சார்பில் திருத்துறைப்பூண்டி சாய்ராம் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் விழிப்புணர்வு கூட்டம் நடைபெற்றது.

பள்ளி முதல்வர் செல்ல துரை தலைமை வகித்தார். நிர்வாக பிரதிநிதி சோமசுந் தரம் முன்னிலை வகித்தார். தலைமையாசிரியை லெட் சுமிபிரியா வரவேற்றார். நாகை மாவட்ட தொழிலாளர் துறை துணை ஆய்வாளர் ராஜசேகர், திருவாரூர் மாவட்ட தொழிலளார் துறை உதவி ஆய்வாளர் ராமலிங்கம், திருத்துறைப் பூண்டி தொழிலாளர் உதவி ஆய்வாளர் கவுரி ஆகியோர் நுகர்வோர் என் றால் என்ன, அதனுடைய பணிகள் என்ன, நுகர்வோ ரின் உரிமைகள், நுகர்வோர் புகார் தெரிவித்தல் குறித்து இணைய தளத்தில் பதிவு செய்வது குறித்து பேசினார் கள். பின்னர் கணினி மூலம் விளக்கம் அளிக்கப்பட் டது. முடிவில் உதவி தலை மையாசிரியை சௌந்தர்ய சத்யா நன்றி கூறினார்.